Registered as a News Paper
பக்கங்கள்: 04
விலை ரூபா: 5-00

26-01-1992

# ஈழநாதம்

THE EELANAATHAM — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம்: 02 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | தை 12 | (26-01-1992) | ஞாயிற்றுக்கிழமை | ஓசை: 342

## மடு முகாமிலுள்ள மக்களை இடம் மாற்றத் திட்டம்

மன்னார் மாவட்டத்தில் உள்ள மடு அகதிகள் முகாமில் உள்ள மக்கள் பல்வேறு சிறிய சிறிய முகாம்களுக்கு இடம்மாற்றம் செய்யப்படவுள்ளனர். இதற்காக பல புதிய சிறுமுகாம்கள் வெவ்வேறு இடங்களில் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றன. இம் முகாமில் நீண்டகாலமாக நிலவிவரும் இடவசதி, குடிநீர் மற்றும் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்காகவே மேற்படி ஏற்பாடு செய்யப்படவிருக்கிறது. இம் முகாமில் ஆயிரக்கணக்கான மக்கள் நீண்டகாலமாக தங்கி இருந்து வருவதால் மேற்படி பிரச்சினைகள் எழுந்துள்ளன. குறைந்த எண்ணிக்கையான மக்களை பல்வேறு இடங்களில் வைத்துப் பராமரிக்கும்போது மேற்படி பிரச்சினைகளை (4ஆம் பக்கம் பார்க்க)

# சீனன்குடா குண்டுவெடிப்பு: புலிகள் வேலையா? விபத்தா?

## கோட்டை ரயில்நிலையத்தில் 16 வடபகுதி இளைஞர் கைது

(கொழும்பு)

யாழ்ப்பாணம் வருவதற்காக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் காத்திருந்த 16 தமிழ் இளைஞர்களை சிறிலங்கா பொலிசார் கைது செய்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது கைது செய்யப்பட்ட இளைஞர்கள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

திடீரென ரயில்நிலையத்திற்கு விரைந்து வந்த பொலிசார் இந்த இளைஞர்களைக் கைது செய்து வாகனங்களில் ஏற்றிச் சென்றனர். இக் கைது தொடர்பாக இளைஞர்களின் உறவினர்கள் கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்துள்ளனர். (க)

## திருமலை திரும்பிய அகதிகளில் மூவர் சிங்களவர்

தமிழகத்திலிருந்து கப்பல் மூலம் திருக்கோணமலைக்கு வந்து சேர்ந்த அகதிகளில் மூவர் சிங்களவர் எனத் தெரிய வந்துள்ளது. லொறிச் சாரதியான விஜபர்ட் (55 வயது) என்பவருடன் செல்வி சந்திரகளுஆராய்ச்சிகே (17 வயது) இவரின் சகோதரர் ஆகியோரே கப்பலில் வந்த சிங்களவராவர்

## புலிகளெனகூறி கொள்ளை பசறையில் சிங்களவர் கைது

(பசறை)

புலிகள் பெயரைச் சொல்லி கொள்ளையிட்ட சிங்களவர்கள் சிறிலங்கா பொலிசாரினால் கைது செய்யப்பட்ட சம்பவம் பசறைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பசறைப் பகுதியைச் சேர்ந்த கொட்டகன்ன என்ற கிராமத்தில் புலிப்படையினர் என்று கூறி ஒரு கோஷ்டி கொள்ளையில் ஈடுபட்டனர்.

பயங்கர ஆயுதங்களுடன் கொள்ளையில் ஈடுபட்ட இவர்களை சிறிலங்கா பொலிசார் சுற்றி வளைத்து கைது செய்த போது இவர்கள்சிங்களவர்கள் என தெரியவந்தது என தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ் அகதிகளை அழைத்து வரல் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் முயற்சி

(கொழும்பு)

சர்வதேச சமூகத்தையும், உதவி வழங்கும் நாடுகளையும் ஏமாற்றும் ஒரு பிரசார நடவடிக்கையே தமிழகத்திலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் கொண்டுவரப்படும் செயலாகும் என்று கொழும்பிலுள்ள அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இந்திய அரசும், இலங்கை அரசும் இணைந்து செயற்படுத்தும் இத்திட்டம் எதிர்வரும் வாரங்களில் பாரிஸ் நகரில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தை கவனத்திற்கொண்டே சிறிலங்கா அரசு ஆர்வம் காட்டுகிறது. எனினும் இது ஒரு முட்டாள்தனமான நடவடிக்கை எனவும் அவை வர்ணித்துள்ளன.

## பாராளுமன்றத்தில் சூடான சர்ச்சை

(கொழும்பு)

சீனன்குடா விமானத்தளத்தில் ஏற்பட்ட பயங்கர குண்டுவெடிப்புச் சம்பவத்தின் காரணம் என்ன? இது புலிகள் இயக்கத்தின் நாசவேலையா? அல்லது தற்செயலாக ஏற்பட்ட விபத்தா? இந்தப் பிரச்சினை குறித்து பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் சூடான விவாதம் எழுந்தது.

சீனன்குடா வெடிகுண்டு சம்பவம் பற்றி பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையை சமர்ப்பித்துப்பேசிய பிரதமர் டி. பி. விஜயதுங்கா இச்சம்பவத்திற்கு நாசவேலை காரணமல்ல என்றும், ஆயுதக் களஞ்சியத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தே காரணம் என்றும் தெரிவித்தார். இதேவேளை பிரதமரின் கூற்றை நிராகரித்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி, இச்சம்பவம் புலிகளின் நாசவேலை இல்லையென்பதை திட்டவட்டமாக அடித்துக்கூற முடியாது எனக் குறிப்பிட்டார்.

சீனன்குடாவிமானப்படைத் தளத்தில் ஏற்பட்டவெடிவிபத்துத் தொடர்பாக நடைபெற்ற பூர்வாங்க விசாரணையில் இருந்து விமானப்படைத் தளத்தில் நிகழ்ந்த பாரிய குண்டுவெடிப்பிற்கு நாசவேலையோ அன்றி 'பயங்கரவாத' நடவடிக்கையோ காரணமல்ல என்றும் ஆயுதக் களஞ்சியத்தில் ஏற்பட்ட விபத்து ஒன்றின் விளைவு காரணமாகவே ஏற்பட்டது எனத் தெரியவருவதாக தான்சமர்ப்பித்தவிசேட அறிக்கையில் பிரதமமந்திரியும் பாதுகாப்பு இணை அமைச்சரு (4ஆம் பக்கம் பார்க்க)

## லலித்தின் இராஜதந்திர கடவுச் சீட்டு ரத்து

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியினதும் அவரது மனைவியினதும் இராஜதந்திர கடவுச்சீட்டை இரத்துச் செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லலித் அத்துலத்முதலி அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதும்அவரதுவிசேட கடவுச் சீட்டை ஒப்படைக்குமாறு குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் கேட்டிருந்தனர் அதற்கு அவர் தமது கடவுச் சீட்டை தவறுதலாக எங்கோ வைத்து விட்டதாக பதிலளித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து கடவுச் சீட்டை ரத்துச் செய்யுமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

## 1 சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணத்தில் அழிவு

(கொழும்பு)

திருக்கோணமலை சீனன்குடா விமானத்தளத்தில் வைக்கப்பட்டிருந்த 100கிலோ நிறையுள்ள 50 குண்டுகள் உட்பட அனைத்து வெடிபொருள்களும் வெடித்துச்சிதறியுள்ளன இதனால் விமானத்தளத்தின் 1000 சதுரமீற்றர் பரப்பளவில் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு சீனன்குடா விமானத்தள குண்டுவெடிப்பு தொடர்பாக சிறிலங்காவின் பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமான் திட்டத்தை சுதந்திரக்கட்சி நிராகரிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பாக அமைச்சர் தொண்டமானின் யோசனைகளை இனி ... டும் என்ற கோரிக்கை உள்ளது. அவரின் யோசனைகள் எமது கட்சிக்கு உடன்பாடு

## அழிந்த விமானத்தளத்தை

## மலையகத்தை குழப்பினால் பிரபாகரன் கை ஓங்கும்

'ஒப்சேவர்' பத்திரிகை எச்சரிக்கை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியினதும் அவரது மனைவியினதும் இராஜதந்திர கடவுச்சீட்டை இரத்துச் செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லலித் அத்துலத்முதலி அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதும்அவரதுவிசேட கடவுச் சீட்டை ஒப்படைக்குமாறு குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் கேட்டிருந்தனர் அதற்கு அவர் தமது கடவுச் சீட்டை தவறுதலாக எங்கோ வைத்து விட்டதாக பதிலளித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து கடவுச் சீட்டை ரத்துச் செய்யுமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

## 1 சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணத்தில் அழிவு

(கொழும்பு)

திருக்கோணமலை சீனன்குடா விமானத்தளத்தில் வைக்கப்பட்டிருந்த 100கிலோ நிறையுள்ள 50 குண்டுகள் உட்பட அனைத்து வெடிபொருள்களும் வெடித்துச்சிதறியுள்ளன இதனால் விமானத்தளத்தின் 1000 சதுரமீற்றர் பரப்பளவில் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு சீனன்குடா விமானத்தள குண்டுவெடிப்பு தொடர்பாக சிறிலங்காவின் பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

முடியாது எனக் குறிப்பிட்டார்.

சீனன்குடாவிமானப்படைத் தளத்தில் ஏற்பட்டவெடிவிபத்துத் தொடர்பாக நடைபெற்ற பூர்வாங்க விசாரணையில் இருந்து விமானப்படைத் தளத்தில் நிகழ்ந்த பாரிய குண்டுவெடிப்பிற்கு நாசவேலையோ அன்றி 'பயங்கரவாத' நடவடிக்கையோ காரணமல்ல என்றும் ஆயுதக் களஞ்சியத்தில் ஏற்பட்ட விபத்து ஒன்றின் விளைவு காரணமாகவே ஏற்பட்டது எனத் தெரியவருவதாக தான்சமர்ப்பித்தவிசேட அறிக்கையில் பிரதமமந்திரியும் பாதுகாப்பு இணை அமைச்சரு

(4ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமான் திட்டத்தை சுதந்திரக்கட்சி நிராகரிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பாக அமைச்சர் தொண்டமானின் யோசனைகளை சிறிலங்கா சுதந்திரக்கட்சி நிராகரிப்பதாக கட்சியின் பதில் செயலாளர் தர்மசிறி அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

தொண்டமானின்யோசனை தொடர்பாகஐ.தே.க.வினதும் சு. கவினதும் நிலைப்பாடுகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை உள்ளது. அவரின் யோசனைகள் எமது கட்சிக்கு உடன்பாடு உடையதல்ல.

தொண்டமானின்யோசனைகள் தொடர்பாக ஐ.தே.க. கொண்டிருக்கும் நிலைப்பாட்டை எவ்வித தாமதமும் இன்றி அறியும் உரிமை மக்களுக்கு உண்டு என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அழிந்த விமானத்தளத்தை படம்பிடிக்கத் தடை

(திருக்கோணமலை)

சீனன்குடா விமான நிலையத்தை படம் பிடிக்கவோ பார்வையிடவோ பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழகத்திலிருந்து வரும் தமிழ் அகதிகளைப் பற்றிய செய்திகளை பெறச்சென்ற செய்தியாளர்கள் சீனன்குடா விமானத்தளத்தை பார்வையிட முயன்றனர்.

இதனைத் தடுப்பதற்காக கொழும்பிலிருந்து செய்தியாளரை ஏற்றிச் சென்ற விமானம் வேறோர் இடத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத்தை குழப்பினால் பிரபாகரன் கை ஓங்கும்

### 'ஒப்சேவர்' பத்திரிகை எச்சரிக்கை

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமானுக்கு எதிராக இனவாதப் பிரசாரத்தைப் பரப்பி மலையகத்தில் நெருக்கடி நிலையை ஏற்படுத்தின் அது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கையை பலப்படுத்துவதாகவும் ஈழக்கோரிக்கையை வலுவடையச் செய்வதாகவுமே முடியும் என ஒப்சேவர் பத்திரிகையில் வெளியான கட்டுரை ஒன்று அரசாங்கத்தை எச்சரிக்கை செய்துள்ளது.

மேலும் அமைச்சர் தொண்டமானின் இனப்பிரச்சினை தீர்விற்கான சமரசத்திட்டத்திற்கு எதிராகத் தென்னிலங்கையில் தோன்றியுள்ள சிங்களப் பேரினவாதத்தையும் இப்பத்திரிகை கண்டித்துள்ளது. அத்தோடு, அரசியற் தீர்வைக் கைவிட்டு இராணுவத் தீர்வை காணவேண்டும் என வலியுறுத்தும் இனவாத சக்திகளையும் சாடியுள்ளது.

## மட்டக்களப்பில் 10 தமிழர் இராணுவத்தால் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய இருநாள் தாக்குதலில் பத்து பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த இருபத்தோராம் திகதி காஞ்சிரங்குடா என்னுமிடத்தில் பதுங்கியிருந்த இராணுவம் பொதுமக்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பேரும், சித்தாண்டியில் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு பேரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதேவேளை கடந்த இருபத்திரெண்டாம் திகதி முரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# குவேக்கர்ஸ் சமாதானக் குழு பெப்ரவரி 9 இல் யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

**சர்வதேச சமாதான இயக்கமான குவேக்கர்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் அடுத்த மாதம் 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்கள்.**

ஜெனீவாவிலிருந்து இங்கு வரவிருக்கும் குவேக்கர்ஸ் குழுவினர் யாழ்ப்பாணத்தில் சில தினங்கள் தங்கியிருப்பர்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் பொழுது விடுதலைப் புலிகளின் தலைவர்களை சந்தித்து சமாதானப் பேச்சு வார்த்தைகள் மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வழிவகைகளை ஆராய்வர்.

இந்த சமாதானக் குழுவினர் முதலில் கொழும்புக்கு வந்து அமைச்சர் தொண்டமானையும் பாராளுமன்றக்குழு அங்கத்தினர் சிலரையும் சந்திப்பார்கள்.

தாங்கள் பெப்ரவரி 9 இல் யாழ்ப்பாணம் வரத் திட்டமிட்டிருப்பதை அவர்கள் புலிகளின் தலைமைப்பீடத்திற்கு அறியத்தந்துள்ளார்கள்.

## எங்களைத் திருத்தும் முன் உங்களைச் சரிபார்க்குக

### கனேடியக்குழுவிற்கு திஸ்ஸபாலசூரியா

(கொழும்பு)

எங்கள்மீதுகவனம்செலுத்த முன்பு உங்கள் சொந்தநாட்டு விடயங்களைச் சரிபார்க்குக என சமூக, சமய நடு நிலையத்தின் தலைவர் வண.பிதா திஸ்ஸபாலசூரிய மனிதஉரிமை

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலில் 2 ஊர்காவற்படை பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நாவற்குடா பகுதியில் முஸ்லிம் ஊர்காவல்படையினர் மீது புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இரண்டு ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர். இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம்பெற்றது.

## விபத்துக்களைத் தடுப்பதில் காவல்துறை தீவிரம்

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்துக்களை தடுக்கும் நடவடிக்கைகளில் தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவின் உறுப்பினர்கள் நாளைமுதல் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள். இந் நடவடிக்கையின்போது காவல் துறை உறுப்பினர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விபத்துக்களைத் தவிர்த்து மக்களைப் பாதுகாப்போம் என்ற தலைப்பில் திரு. நடேசன் தமதுஅறிக்கையில்மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

எமது மக்களை கொடிய சிங்கள அரசிடமிருந்து மாத்திரமல்ல எமது தவறுகளிலிருந்தும் பாதுகாக்கும் பாரிய



பொறுப்பை விடுதலைப் புலிகள் ஏற்றுள்ளனர். இதன் ஒரு கட்டமாகவே தமிமீழ காவல் துறையின் போக்குவரத்துப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அகதி முகாமில் தமிழர் கடத்தல்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பச்சை நூர்அகதி முகாமில் தங்கியிருந்த தமிழ் மக்களில் பலர் சமூக விரோதிகளால் கடத்திச் செல்லப்படுவதாக தெரியவருகின்றது. கடந்த இரு வாரங்களில் மட்டும் பத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். கிண்ணியாப் பகுதியிலும் தமிழ் மக்கள் பலர் மர்மமான முறையில் காணாமற்போயுள்ளனர்.

## கொழும்பு தபால் நாளை விநியோகம்

(ஈச்சமோட்டை)

யாழ். பிரதம தபாலகத்துக்கு கொண்டுவரப்பட்ட 408 வெளியூர் தபால் பொதிகளும் தரம்பிரிக்கப்பட்டு நாளை திங்கட்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்படும் என தபாலக வட்டாரம் தெரிவித்துள்ளது. ஆனால் முதலில் கொழும்பு தபால்கள் விநியோகித்த பின்னர் தான் வெளிநாட்டு தபால்கள் விநியோகிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (43)

ஹிந்துல தோட்டப்பணம் கொள்ளை;

## இரு மட்டு. இளைஞர்களை பொலிஸ் தேடுகிறதாம்

(கொழும்பு)

பதுளை மாவட்டத்திலுள்ள எல்ல பொலிஸ் பகுதியில் ஹிந்துகலை என்னுமிடத்தில் கடந்த பத்தாம் திகதியன்று இடம்பெற்ற பத்து இலட்சம் ரூபா கொள்ளைச் சம்பவம் தொடர்பாகவும், இரட்டைக் கொலை தொடர்பாகவும் இரண்டு தமிழ் இளைஞர்கள் தேடப்பட்டுவருவதாகப் பொலிஸ் தலைமைக்காரியாலயம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தைச்சேர்ந்த விஷ்ணு, நாகேஸ் என்னும் இருவருமே பொலிஸாரால் தேடப்படுவோர் என்று சிறி லங்காப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

## சிங்களவர் மத்தியில் பெரியளவில் மனமாற்றம்

### 'ராவய' வின் கணிப்பீடு

(கொழும்பு)

காலம் காலமாக இரத்தம் சிந்துவதால் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றி சிங்கள மக்கள் நல்லபாடம் கற்றுள்ளனர். இதன் மூலமாக அவர்களிடையே ஒருவித மனமாற்றம் ஏற்பட்டு வருகிறது இது வரவேற்கப்படக் கூடியதே என பி. பி. ஸியின் சிங்கள சேவை நேற்றிரவு கூறியது.

இதற்கு தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் ராவய என்னும் பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பீட்டை பி. பி. ஸி. ஆதாரமாகக் காட்டியது.

'ராவய' பத்திரிகையின் கருத்துக்கணிப்பின் சில முடிவுகள் வருமாறு இலங்கையின் முக்கிய அரசியல் பிரச்சினையான இனப்பிரச்சினை தொடர்பான கருத்துக் கணிப்பீட்டிலிருந்து கல்வியறிவு பெற்ற சிங்கள மக்களில் சுமார் எழுபத்தெட்டு சதவிகிதத்தினர் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர் எனவும், இவர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை பாலசுப்பிரமணியம் முகிலன் (சுக்ளா)

வீரஜனனம் 20-03-1973 வீரச்சாவு 6-02-1991

திதி : 26-01-1992

எரிகின்ற திரியினுக்(கு) எண்ணெயாய் வாய்த்த
எங்கள் முகிலா!
புரிகின்ற தையாநீ! புறப்பட்ட புனிதப்
பயணத்தின் நோக்கம்
சரியென்று தேர்ந்திட்ட சத்திய நெறிநின்று
சமருஞ் செய்தாய்!
உரிதென்று நாம்காணும் ஒளிர்கின்ற தமிழீழ
உணர்வில் வாழ்வாய்
பேராண்ட யாழ்மத்திய கல்லூரி மாணவராய்ப்
பிறந்த கொற்றம்
ஈராண்ட 'சாரணீய' ஒளிகூட்டும் சேவையினால்!
உயர்ந்தே நிற்கும்!
நீராண்ட முகில்கூட நினைவூட்டும் உன் நாமம்
நெஞ்சம் தன்னில்!
ஓராண்டா ஓடிடிச்சு! உறங்காவுன் நினைவலைகள்
ஓடமா றென்னில்!
மூகையொன்று மலராகி உலகெங்கும் மணம்வீச
முயல்கின்ற பருவத்தில்!
மூவாறு பதினெட்டு முற்றாக முடியாத
இளங்காளை யுருவத்தில்!
பகைவெல்லத் தமிழ்வெல்லப் பைந்தமிழ் மண்ணுக்கே
பசளையும் ஆனாய் நீயே
பாவிலும் வாழ்வாயெம் நாவிலும் வாழ்வாயெம்
பாதையும் ஆனாய் நீயே!

கிரியைகள் நெல்லியடி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமத்தில் இன்று நடைபெறும்.

- குடும்பத்தினர்

65, குமாரசாமி வீதி, யாழ்ப்பாணம். (2137) 260, கச்சாய் வீதி, சாவகச்சேரி.

# உள்நாட்டு, சர்வதேச தொலைத் தொடர்புகள்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 - 03 - 1940 | 27 - 12 - 1991 |

அமரர்

## திருமதி தவமணி முருகேசு

எங்கள் இதயங்களில் அணையாத தீபமாய் சுடர் விட்டு எரிந்து அணைந்த ஒளி விளக்கே! உங்கள் ஊன் உருக்கி எங்களை ஓங்கவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இன்று ( 26 - 01 - 1992 ) ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில், நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

''யோகவாசம்''
உரும்பராய் தெற்கு,
உரும்பராய். (2143)

# A/L 91 பயிற்சிப் பரீட்சை

ஒவ்வொரு மாதத்தின் இறுதி வாரத்தில்

இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல் விலங்கியல், தூய, பிரயோக கணிதம் ஆகிய பாடங்களுக்கு பயிற்சிப்பரீட்சைகள் நடாத்தப்படும்.

பிரவேசம்:- எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம்.

முதலாவது பரீட்சை: 28-01-92

விபரங்கட்கு :

**BOND கல்வி நிறுவனம்,**
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3835)

# வரி விளம்பரம்

## கல்வி

*ENGLISH GRAMMAR AND SPOKEN ENGLISH BY V. N. KANDASAMY A. I. B PART I (LONDON) INTER (LONDON)* 3 மாதப் பயிற்சி ஆரம்பிக்கிறது 87, கொக்குவில், திருநெல்வேலி றோட் (பாலத்துக்கு அருகில்) கொக்குவில். [2144]

## தேவை

வைத்திய சாலையில் உதவியாளராகக் கடமையாற்றுவதற்கு ஒரு பெண் தேவை. மெடிக்கல் வைத்தியசாலை, ஸ்ரேசன் றோட், சுன்னாகம். (றெயில்வே கேற்றுக்கு அருகாமையில்) முடிவுத்திகதி 10.02.92 (2140)

## A.L PHYSICS

திரு விமல்ராஜ்

சனி - ஞாயிறு

1.00 - ஒளியியல்

2.00 - மின்னியல்

ஆரம்பம்: 01.02.92

BOND Institute
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3847)

# அறிவித்தல்

தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்
தலைமைச் செயலகம்
தமிழீழம்.

யாழ் மாவட்டத்தில் உள்ள இணக்க மன்றுகள் / மேன்முறையீட்டு மன்றுகள் / அரம்ப நீதி மன்றுகளின் தீர்வுகளை இணக்கமாக ஏற்றுக் கொண்டு இதுவரை காலமும் நிறைவேற்றாது உள்ள கட்சிக்காரர்களுக்கும், மேற்படி மன்றுகளில் விசாரணைகளுக்கு சமுகமளிக்காதுள்ள கட்சிக் காரர்களுக்கும் எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

1. எனவே இணக்கத் தீர்வுகளை நிறைவேற்றாது உள்ள கட்சிக்காரர்கள் 92.01.31ம் திகதிக்கு முன் குறித்த மன்றுகளுக்குச் சென்று இணக்கத் தீர்வை நிறைவேற்ற வேண்டும். அல்லது அவ்வாறுநிறைவேற்ற முடியாமைக்குரிய காரணத்தை எழுத்தில் எழுதிகுறித்த மன்றில் ஒப்படைத்தல் வேண்டும்.

2. குறித்த பிணக்குகளில் முறையீட்டாளர்கள் குறித்த மன்றுகளுக்குச் சென்று 92.01.31ம் திகதிக்கு முன் இணக்கத் தீர்வுப் பிரதியை செயலாளர் / பதிவாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3. யாழ் மாவட்டத்திலுள்ள இணக்கமன்றுகளில் பிணக்குகள் தாக்கல் செய்துகொள்வதை 92.02.01ம் திகதியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

பொறுப்பாளர்
தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவு

(2136)

# நினைவு கூருகின்றோம்...

1992 - 01 - 26



லெப். சசி



லெப். முரளி

இளங்காளை யுருவத்தில்!
பகைவெல்லத் தமிழ்வெல்லப் பைந்தமிழ் மண்ணுக்கே
பசளையும் ஆனாய் நீயே
பாவிலும் வாழ்வாயெம் நாவிலும் வாழ்வாயெம்
பாதையும் ஆனாய் நீயே!

கிரியைகள் நெல்லியடி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமத்தில் இன்று நடைபெறும்.

- குடும்பத்தினர்

65, குமாரசாமி வீதி, யாழ்ப்பாணம். (2137) 260, கச்சாய் வீதி, சாவகச்சேரி.


விலங்கியல், தூய, பிரயோக கணிதம் ஆகிய பாடங்களுக்கு பயிற்சிப்பரீட்சைகள் நடாத்தப்படும்.

பிரவேசம்:- எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம்.

முதலாவது பரீட்சை: 28-01-92

விபரங்கட்கு :

BOND கல்வி நிறுவனம்,
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3835)

# உள்நாட்டு, சர்வதேச தொலைத் தொடர்புகள்

1. உள்நாட்டுத் தந்தி
   (24 மணித்தியாலங்களில் உரியவரிடம் சேரும்)
2. வெளிநாட்டுத் தந்தி
   (30 மணித்தியாலங்களில் உரியவரிடம் சேரும்)
3. FAX (ஃபக்ஸ்)
   - உள்ளூர் செய்திகள் (24 மணித்தியாலங்களில் சேரும்)
   - வெளிநாட்டுச் செய்திகள் (24 மணித்தியாலங்களில் சேரும்) (செய்திகள் A4 அளவு தாளில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்)
4. TELEX (ரெலெக்ஸ்)
   (24 மணித்தியாலங்களில் சேரும்)
5. தொலைபேசி - செய்தி
   (120 மணித்தியாலங்களில்) (5 நாட்களின் பின் பதிலுடன் அறிவிக்கப்படும்)
   - அவசர (URGENT) தொலைபேசிச்செய்தி (பதிலுடன் 2நாட்கள்) (48 மணித்தியாலங்களில்)
6. ரேடியோ அல்லது பத்திரிகை விளம்பரங்கள்
   - மரண அறிவித்தல்கள் (2 நாட்கள்)
   - பிறந்தநாள் வாழ்த்துக்கள் போன்றவை (3 நாட்கள்)
   - கலர்படங்கள் 15 நாட்களில் கழுவிக் கொடுக்கப்படும்

BEACON
தொலைத்தொடர்புகள்,
380, ஆஸ்பத்திரி வீதி,
ஸ்ரேசன் சந்தி,
யாழ்ப்பாணம். (சி 3813)

வீடியோ, கசட்டுகள்
## தேவை

நல்ல நிலையிலான பாவனை செய்த வீடியோ கசெட்டுகள் தேவை. நியாயமான விலை தரப்படும்.

நியூ விக்ரேஸ்
யாழ்ப்பாணம்

(2142)


# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை பற்றிக்
(சின்னராசா-கணேசலிங்கம்)

வீரஜனனம் : 25-3-1971

வீரச்சாவு : 26-1-1991

மழலையாய் எம் மடியில் தவழ்ந்திருந்தாய் பின் நல்ல
மைந்தரின் தோழமை கொண்டிருந்தாய்
பள்ளியில் திறம்பட கற்றிருந்தாய்
பாதியிலே உன்வழியை மாற்றி விட்டாய்

தாயினை ஒருகணம் வெறுத்திருந்தாய்
தாய்மண்ணினை மீட்கவே சென்றிருந்தாய்
வீரனாய் களத்திலே நீ போரிட்டாய் - மா
வீரனாய் இன்று நீ மாறிவிட்டாய்

- திருமலை மக்கள்

(2141)

1992 - 01 - 26



## லெப். சசி

## லெப். முரளி



1986ஆம் ஆண்டு இதேதினத்தில் ஒட்டிசுட்டானில் சிறிலங்கா அதிரடிப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய
**லெப். சசி** (கந்தசாமி மகேஸ்வரன் - கொக்குத்தொடுவாய் மணலாறு)

இம்மோதலின் பின் ஒட்டிசுட்டான் சந்தையில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்து பொதுமக்கள்

தம்பலகமத்தில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 28 பொதுமக்கள்
வவுனியா மாறம்பைக்குளத்தில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்

1988ஆம் ஆண்டு கொடிகாமத்தில் இந்தியப்படையினருக்கெதிரான தாக்குதல் முயற்சியின்போது வீரச்சாவெய்திய
**பாலன்** (சோ. சிவபாலன் - முல்லைப்புலவு, காரைநகர்)

வட்டுக்கோட்டையில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய
**லெப். முரளி** (சிவசுப்பிரமணியம் ஜெயக்குமார் - விபுலானந்தர் வீதி,மாதகல்)

மட்டக்களப்பு கிண்ணியடியில் இந்தியப்படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்ட தாய், குழந்தை உட்பட 5 பொதுமக்கள்

1989ஆம் ஆண்டு யாழ். இந்துக்கல்லூரிக்குள் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஆசிரியர்

எழுவைதீவில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இளைஞன்

1990ஆம் ஆண்டு தமிழகத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வாகன விபத்தின்போது எம்மைப்பிரிந்த
**சௌத்திரி** (கணபதிப்பிள்ளை சண்முகம்பிள்ளை - மயிலிட்டி)

1991ஆம் ஆண்டு மன்னார் நாவற்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய
**மேஜர் கௌரி/சுதுஜீவன்** (சதானந்தன் அனுதீபன்-பாலப்பெருமாள்கட்டு, வட்டக்கண்டல், மன்னார்)

ஆனையிறவு சிறிலங்காப்படையினருடனான நேரடி மோதலின் போது காயமுற்று வீரச்சாவெய்திய
**பற்றிக்** (சின்னராசா கணேசலிங்கம் - 6-ம் வட்டாரம், சாம்பல்தீவு,திருமலை)

வாகரையில் எதிர்பாராதவிதமாகக் கண்ணிவெடி வெடித்ததில் காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய
**சாந்தன்** (இரத்தினம் கதிர்காமநாதன் - கல்முனை, அம்பாறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி/3842)

## சிந்தனைக்கு

உண்மை தெரிந்தபோது, அதை உரக்கக்கூவாதோர் பொய்யர்களுக்கு உடந்தையாகின்றார்கள்

-சார்ல்ஸ்பெகை


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 26-01-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் 05


## நேரில் கண்டதை தெற்கில் கூறுங்கள்

"நேரில் வந்து பார்த்த பின்னர்தான் உண்மை நிலை புரிகின்றது. நாம் தென்னிலங்கையில் கேள்விப் பட்டவற்றிற்கும் இங்கு நாங்கள் காண்பவற்றிற்கும் இடையில் பெரும் வித்தியாசங்கள் உண்டு. விடுதலைப் புலிகள் பற்றியும், தமிழ்மக்களின் நிலைபற்றியும் தெற்கில் உள்ள சிங்கள மக்களுக்கு தவறான ஓர் எண்ணமும், பார்வையும் கற்பிக்கப்படுகின்றன. உண்மை நிலை திரிக்கப்படுகின்றது" இவ்வாறு யாழ் வந்த கத்தோலிக்க துறவறச் சபை பிரதிநிதிகள் பத்திரிகையாளர் சந்திப்பின் போது தெரிவித்தனர்.

இவ்வாறாகக் கருத்து வெளியிட்டுள்ள முதல் நல்லெண்ணத் தூதுக்குழுவினர் அல்லர் இவர்கள். இதற்கு முன்னரும் யாழ்ப்பாணம் வந்துசென்ற தூதுக்குழுவினரும் இதேபோன்ற கருத்துக்களையே வெளியிட்டுள்ளனர். அண்மையில், யாழ்ப்பாணம் வந்துசென்ற மெதடிஸ் திருச்சபையின் முன்னாள் தலைவர் சோமா பெரேரா தலைமையிலான நல்லெண்ணத் தூதுக்குழுவினரும் இதனையே தெரிவித்திருந்தனர்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் இதனை மூடி மறைத்துப் பொய்ப்பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது. சிறிலங்கா அரசாங்கமும், அரசியல்வாதிகளும், சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகளும் சேர்ந்து விடுதலைப் புலிகளைா ஒரு 'பயங்கரவாதிகள்', அவர்கள் ஆயுதத்தின் மூலம் தமிழ்மக்களை அடக்கி வைத்துள்ளார்கள், தமிழ்ச் சிறுவர்களை வலுக்கட்டாயமாக போர்க்களத்திற்குத் தள்ளுகின்றார்கள், தமிழ்மக்களை அவர்களிடம் இருந்து மீட்பதோடு இலங்கையின் ஒருமைப்பாட்டையும் சிங்களவரையும் பாதுகாக்க வேண்டும் என்றே பிரசாரம் செய்து வருகின்றன. இவர்களின் இப்பிரசாரம் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் பற்றிய உணர்வை மட்டும் 'பயங்கரவாதம்' என்று காட்டும் நிலைக்கு அப்பால் போய் விடுதலைப்புலிகளே ஒரு பயங்கரத் தோற்றம் கொண்டவர்களாக, சாதாரண மனிதத் தோற்றத்தில் இருந்து மாறுபட்டவர்களாகக் காட்டும் அளவிற்கு பேரினவாதத்தின் பிரசாரம் சென்றுள்ளது.

இதேவேளை இதனைக் கண்டறிவதற்கு சிங்கள மக்களையோ அன்றி வடபகுதிக்கு வரவிரும்புகின்றவர்களையோ, சிறிலங்கா அரசாங்கம் இலகுவில் அனுமதிப்பதாகவும் இல்லை. இதற்குச் சிறப்பானதொரு எடுத்துக்காட்டாக அமைந்தது டிசம்பர்மாதம் முதல்வாரத்தில், புலிகளின் காவலிலுள்ள நாற்பது சிங்களப் பொலிசாரைப்பார்வையிடுவதற்கு அவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணம் வர இருந்த பயணத்தை பொய்யான காரணம் கூறி சிறிலங்கா அரசாங்கம் தடுத்து விட்டமையாகும்.

அதாவது இச்சிங்கள மக்களின் விஜயம் இடம்

# தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்

பொலிஸ் நிர்வாகம் பிரதேச சுயாட்சி அமைப்பிற்குக் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதும் திரு. தொண்டமானின் திட்டத்திலுள்ள ஆக்க பூர்வமான ஒரு அம்சமாகும். வடகிழக்கு மாகாணத்திற்கான காவற்படையை உருவாக்குவதற்கான முழுஅதிகாரமும் பிரதேச அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

பொலிஸ் மா அதிபர், உதவி பொலிஸ் மா அதிபரிலிருந்து சகல மேலதிகாரிகளையும் ஏனைய தரத்தினரையும் கொண்டதாக பிரதேச காவற்படை அமையும். காவற்படை பிரதேச இனவிகிதாசாரத்தை பிரதிபலிக்கும். காவற்துறையினரின் நியமனம், இடமாற்றம், பதவிநீக்கம், ஒழுங்காற்று கட்டுப்பாடு ஆகியன மாநில அரசினால் மேற்கொள்ளப்படும். உடனடியாக ஆரம்பஆட்சேர்ப்புக்கு 10,000 காவற்துறையினரை பணியில் ஈடுபடுத்தலாமென தொண்டமான் யோசனை தெரிவித்திருக்கிறார்.

மாநில பொலிஸ் மா அதிபர் மாநில முதலமைச்சருக்கு பொறுப்புள்ளவராகவும் அவரின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிபவராகவும் இருப்பார். இந்த யோசனைகள் மாநில பொலிஸ் படையை மாநில சுயாட்சி அமைப்பின் அதிகார வரம்பிற்குள் உட்படுத்துகிறது.

மாநில பொருளாதார திட்டமிடுதல், மாநில அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட துறைகளிலும் சில முற்போக்கான யோசனைகள் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன. குறிப்பாக, மாநில அபிவிருத்தித் திட்டங்களுக்கு மத்திய அரசின் குறுக்கீடு இன்றி, நேரடியாக வெளிநாட்டுஉதவியைப்பேசிப் பெறும் அதிகாரம் வழங்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

யாப்பின் 13ஆவது திருத்த சட்டத்தில் அரசுக்கு ஒதுக்கப் பட்ட நிரல், பொதுநிரல் ஆகியனவற்றிலிருந்து சில விடயங்கள் மாநில சுயாட்சி அமைப்பிற்கு மாற்றம் செய்யப்பட்டு மொத்தம் 36 துறைகள் மாநில நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. நிலவுரிமை, சட்டம் ஒழுங்கு, பொருளாகார திட்டமிடல், நிதிஒதுக்கீடு, பொதுப்பணி, நீர்ப்பாசனம்,விவசாயம், மீன்பிடி, கல்வி, உயர்கல்வி, சுகாதாரசேவை, நிவாரணம் புனர்வாழ்வு, சக்தி, துறைமுகம், வீடமைப்பு, நெடுஞ்சாலை, போக்குவரத்து, கடல்வழி கப்பல் போக்குவரத்து, பிரதேச கடல் எல்லைக்கு அப்பால் மீன்பிடித்தல் ஆகியன உட்பட்ட விடயங்களும்கருமங்களும் மாநில நிர்வாக ஆட்சியின் கீழ் கொண்டுவரப்படடிருப்பது தொண்டமானின் திட்டத்தினது ஒரு சிறப்பம்சமாகும்.

வடகிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம், சிங்கள மக்களின் நலன்களை பாதுகாக்கும் வகையில் திரு. தொண்டமான்சில யோசனைகளை இத்திட்டத்தில் முன் வைத்திருக்கிறர். தமிழர் மாநிலத்தில் வதியும் சிறுபான்மையினருக்கு அரசியல் யாப்புரீதியாக பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டுமென வற்புறுத்தியிருக்கிறார் நிலம், சட்டம் ஒழுங்கு, நிதி,கல்வி,பண்பாடு, விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், வணிகம் போன்ற விடயங்களில் உரிமைகள்,காப்புகள் வழங்கும் அரசியல் நிர்வாக ஒழுங்குகள் செய்யப்பட வேண்டுமெனவும் ஆலோசனை கூறுகிறார். முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் பிரதேச சபைகளாக பிரிக்கப்பட்டு, அவை பிரதேச சபைகள் ஒன்றியமாக இணைக்கப்பட்டு, மாநில சுயாட்சியமைப்பின் ஒரு அலகாக செயற்படலாம் எனவும் திரு. தொண்டமான் யோசனை தெரிவிக்கிறார்.

அமைச்சர் தொண்டமானின் யோசனைகள் பற்றி இங்கு மிகவும் சுருக்கமாகப் பார்த்தோம். அவரின் தீர்வுத் திட்டத்தை அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்து ஒருமுழுமையான ஆய்வு செய்வது இந்தக் சட்டுரையின் நோக்கமல்ல. இத் திட்டத்திலுள்ள ஆக்கபூர்வமான அம்சங்களையும், குறைபாடுகளையும், வெற்றிடங்களையும், தெளிவற்ற தன்மைகளையும் சுட்டிக்காட்டுவதோடு, ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் எல்லைக்குள் வகுக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான சுயாட்சிமுறை இது என்பதை எடுத்துக்காட்டுவதே எமது நோக்கம். இது பூரணப் படுத்தப்படாத திட்டம் என்பதையும், 'வடகிழக்குப் பிரதேசத்தை நிர்வகிக்கும் சில நிறுவனங்களின் மேலோட்ட ஆய்வு' மட்டும் இதில் தரப்படுவதாகவும் திரு. தொண்டமானே ஒப்புக்கொள்கிறார். அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு அவர் எழுதிய கடிதத்தில் தமது தீர்வுத்திட்டத்தை மேலும் செழுமைப் படுத்தி பூரணப்படுத்தும்வகையில் பேச்சுவார்த்தைகள்அமையலாம் என்கிறார்.

திரு. தொண்டமானின் தீர்வுத்திட்டத்தை விடுதலைப்புலிகள் இயக்கம் நிராகரித்து விடவில்லை. அமைச்சர் யாழ்ப்பாணம் வரும்பொழுது இத்திட்டத்தில் உள்ளபிரச்சினைகள் பற்றி நேரில் கலந்துரையாடலாம் என எண்ணினோம். இதன்படி அவருக்கு சாதகமான பதிலை அனுப்பிவைத்தோம்.

இதற்கிடையில், திரு. தொண்டமானின் தீர்வுத் திட்டம் தென்னிலங்கையில் மிகப்பெரியசர்ச்சையைகிளப்பி விட்டது. அரசியல்வாதிகள், மதவாதிகள், தொழிற்சங்கவாதிகள் எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்கள் மத்தியில் தொண்டமானின் திட்டத்திற்கு பலத்த எதிர்ப்பு எழுந்தது சிங்கள - பௌத்தபேரினவாதம் வெறிகொண்டெழுந்து கோரத்தாண்டவம் ஆடியது. சிறிலங்கா அரசியல் அரங்கில் மீண்டும் தமிழர் துவேசம் எழுந்து தனது அசிங்கமான முகத்தைக்காட்டியது இந்தப் பேரினவாத எழுச்சிக்கு பௌத்தபீடம் தலைமை தாங்கியது. திரு. தொண்டமான் மிகவும் சந்தேகத்திற்குரிய, மிகவும் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாக மட்டுமின்றி, சிங்கள தேசத்தின் துரோகியாகவும் கணிக்கப்பட்டார்.

அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டத்தில் வடகிழக்கு மாகாணங்கள் தமிழரின் வரலாற்றுத் தாயகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டமையே தென்னிலங்கைப் பேரினவாதிகள் மத்தியில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியது. தமிழருக்கென தனித்துவமான தாயகம் இருக்கவில்லை என்றும், முழு இலங்கைத்தீவுமே பௌத்த பூமியெனவும், 'தாயகம்' என்ற கோட்பாடு தனியரசின் மாற்றுவடிவம் எனவும் சித்தாந்த மாயையில் சிக்குப்பட்டிருந்த இனவாதிகளுக்கு தொண்டமானின் இந்த யோசனையை ஜீரணிக்க முடியவில்லை. வடக்கிலிருந்து கிழக்கைப் பிரித்து, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் தென்தமிழீழத்தைபடிப் படியாக விழுங்கி விடலாம் என நம்பியிருக்கும் பேரினவாதிகளுக்கு வடகிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைந்த தமிழர் மாநிலம் என்றும் அந்த மாநிலத்திற்கு தன்னாட்சி அதிகாரமும் வேண்டி நிற்கும் தொண்டமானின் யோசனை ஆவேசத்தை மூட்டியது.

வடகிழக்கு மாகாணத்தின் நிலஉடைமைப்பாட்டுஉரிமை, அரச காணிகள்மீதான ஆட்சியுரிமை, சுதந்திர காலத்தின் இனவிகிதாசார அடிப்படையில் குடியேற்றத்திற்கு நிலம் பங்கீடுசெய்யும் அதிகாரம் போன்ற யோசனைகளும் சிங்கள இனவாதிகள் மத்தியில் எதிர்ப்பைக் கிளப்பிவிட்டிருக்கிறது. இலங்கைத் தீவின் மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பை திரு. தொண்டமான் தமிழருக்கு தானமாக வழங்கி விட்டார் என அவர் மீது குற்றம்சாட்டப்பட்டது.

திருக்கோணமலைத் துறைமுகம் சுயாட்சி அமைப்பின் நிர்வாக அதிகாரத்திற்கு உட்படுத்தப்பட்டதும் சிங்கள இனவாதிகளுக்கு பெரும் சினத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழீழத்தின் துறைமுகங்கள் மட்டுமல்லாது கடல்வழி கப்பல் போக்குவரத்து, பிரதேச எல்லைக்கு அப்பால் மீன்பிடித்தல் போன்ற விடயங்களும் தமிழரின் ஆட்சியதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பதும் பெரும் சர்ச்சையை உண்டு பண்ணியுள்ளது. இலங்கைத் தீவின் 60 விகிதமான கடல் எல்லையையும் அதற்கு அப்பாலான ஆழ்கடலையும் தமிழரின் ஆட்சிபீடத்திற்கு ஒப்படைத்துவிட்டார் எனவும் அமைச்சர் தொண்டமான் மீது பழி சுமத்தப்பட்டது,

ஒட்டுமொத்தத்தில் திரு. தொண்டமானின் தீர்வுத்திட்டம் தமிழீழத் தனியரசுக்கான அத்திவாரமாக அமையப்பெற்றிருக்கிறது என்பதே சிங்கள இனவாத சக்திகளின், குறிப்பாக சிங்கள பௌத்த பீடத்தின் வாதமாகும். இது நாட்டைத் துண்டாடும் நோக்கத்தைக் கொண்ட ஒரு நாசகாரத்திட்டம்; இலங்கையின் ஒற்றுமைக்கும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் குந்தகம் விளைவிக்கும் ஒரு ஆபத்தான திட்டம்; வடகிழக்கில் சிங்கள அரச நிர்வாகத்திற்கு சாவுமணி அடிக்கும் ஒரு சதித் திட்டம் என்றெல்லாம் தொண்டமானின் திட்டத்திற்கு எதிராக இனவாதப் பேய்கள் கூச்சல் எழுப்பின. இந்தத் திட்டம் ஏற்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டால், சொற்ப காலத்தில் தமிழர்கள் ஒருதலைப்பட்சமாகசுதந்திரத்தை பிரகடனம் செய்து தனியரசை அமைத்துக்கொள்ள முடியும் எனவும் ஒரு சிங்கள இனவாத அமைப்பு அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சிங்கள இனவாத எழுச்சி இயக்கம் திரு.தொண்டமானை தமிழன் என்ற வகையில் இனங்கண்டு மிக மோசமாகச் சாடியது சிங்கள இனத்தின் விரோதி என்றும், துரோகி என்றும், சதிகாரன் என்றும், பிரபாகரனின் ஆவி என்றும் திட்டியது.

(தொடரும்)

## மாணவர்கள் மத்தியில் சுகாதாரம் பேண முயற்சி

பாடசாலை மாணவர்கள் மிக இளம் வயதிலிருந்தேசூழல்

## சுபாஸ் சந்திர போஸிற்கு பாரதரத்னா விருது

## நாடு கடத்தல் உத்தரவு ஒருவருக்கு ரத்து

டம் இருந்து மீட்பதோடு இலங்கையின் ஒருமைப்பாட்டையும் சிங்களவரையும் பாதுகாக்க வேண்டும் என்றே பிரசாரம் செய்து வருகின்றன. இவர்களின் இப்பிரசாரம் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் பற்றிய உணர்வை மட்டும் 'பயங்கரவாதம்' என்று காட்டும் நிலைக்கு அப்பால் போய் விடுதலைப்புலிகளே ஒரு பயங்கரத் தோற்றம் கொண்டவர்களாக, சாதாரண மனிதத் தோற்றத்தில் இருந்து மாறுபட்டவர்களாகக் காட்டும் அளவிற்கு பேரினவாதத்தின் பிரசாரம் சென்றுள்ளது.

இதேவேளை இதனைக் கண்டறிவதற்கு சிங்கள மக்களையோ அன்றி வடபகுதிக்கு வரவிரும்புகின்றவர்களையோ, சிறிலங்கா அரசாங்கம் இலகுவில் அனுமதிப்பதாசவும் இல்லை. இதற்குச் சிறப்பானதொரு எடுத்துக்காட்டாக அமைந்தது டிசம்பர்மாதம் முதல்வாரத்தில், புலிகளின் காவலிலுள்ள நாற்பது சிங்களப் பொலிசாரைப்பார்வையிடுவதற்கு அவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணம் வர இருந்த பயணத்தை பொய்யான காரணம் கூறி சிறிலங்கா அரசாங்கம் தடுத்து விட்டமையாகும்.

அதாவது இச்சிங்கள மக்களின் விஜயம் இடம் பெற்றால் விடுதலைப்புலிகள் பற்றியும் தமிழ்மக்களின் வடபகுதி உண்மை நிலை பற்றியும், தென்னிலங்கையில் இதுவரை பேரினவாத சக்திகள் மேற்கொண்டு வரும் பொய்யான பிரசாரங்கள் பலவீனம் அடைந்து விடும் என்பதனாலேயே அவர்களை வடபகுதிக்கு அனுப்புவதற்கு சிறிலங்கா அரசாங்கம் தடைவிதித்தது தடையாக நிற்கிறது.

இந்நிலையில், சிரமங்களின் மத்தியில் யாழ்ப்பாணம் வந்து திரும்பும், நல்லெண்ணத் தூதுக்குழுவினர் இங்கு காண்பவற்றை தென்னிலங்கை மக்களுக்கு தெளிவுபடக் கூறவேண்டும். அத்தோடு, சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டு வரும் பொய்ப் பிரசாரங்களையும் பேரினவாதப் பத்திரிகைகள் தவறான வழியில் மக்களை இட்டுச் செல்வதையும், வெளிப்படுத்த வேண்டும்.

அத்தோடு ''நாம் இனத்துவேசிகள் அல்லர் போர் வெறி கொண்ட வன்முறையாளர்களும் அல்லர், நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ, விரோதிகளாகவோ கருதவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கின்றோம். சிங்களப் பண்பாட்டை கௌரவிக்கின்றோம். சிங்கள மக்களின் தேசிய வாழ்வில், அவர்களது சுதந்திரத்தில் நாம் எதுவித தலையீட்டையும் விரும்பவில்லை''.

''நாம் எமது வரலாற்றுத் தாயகத்தில் ஒரு தேசிய இனம் என்ற அந்தஸ்துடன் நிம்மதியாக.சுதந்திரமாகக், கௌரவத்துடன் வாழ விரும்புகின்றோம். எம்மை நிம்மதியாக வாழ விடுங்கள்'' என்று தலைவர் பிரபாகரன் தெரிவித்த தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையையும் சிங்கள மக்களிடம் எடுத்துக்கூறுங்கள். அப்பொழுதுதான் இலங்கையில் அமைதியும், சமாதானமும் ஏற்படும் என்று தெரிவிப்பதும் உங்கள் கடமையாகும்.

கள் மாநில சுயாட்சி அமைப்பிற்கு மாற்றம் செய்யப்பட்டு மொத்தம் 36 துறைகள் மாநில நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. நிலவுரிமை, சட்டம் ஒழுங்கு, பொருளாதார திட்டமிடல், நிதிஒதுக்கீடு, பொதுப்பணி, நீர்ப்பாசனம்,விவசாயம், மீன்பிடி, கல்வி, உயர்கல்வி, சுகாதாரசேவை, நிவாரணம் புனர்வாழ்வு, சக்தி, துறைமுகம், வீடமைப்பு, நெடுஞ்

சட்டுரையின் நோக்கமல்ல. இத் திட்டத்திலுள்ள ஆக்கபூர்வமான அம்சங்களையும், குறைபாடுகளையும், வெற்றிடங்களையும், தெளிவற்ற தன்மைகளையும் சுட்டிக்காட்டுவதோடு, ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் எல்லைக்குள் வகுக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான சுயாட்சிமுறை இது என்பதை எடுத்துக்காட்டுவதே எமது நோக்கம். இது

திரிகையாளர்கள் மத்தியில் தொண்டமானின் திட்டத்திற்கு பலத்த எதிர்ப்பு எழுந்தது சிங்கள - பௌத்தபேரினவாதம் வெறிகொண்டெழுந்து கோரத்தாண்டவம் ஆடியது. சிறிலங்கா அரசியல் அரங்கில் மீண்டும் தமிழர் துவேசம் எழுந்து தனது அசிங்கமான முகத்தைக்காட்டியது இந்தப் பேரினவாத எழுச்சிக்கு பௌத்தபீடம் தலைமை தாங்கியது. திரு. தொண்ட

போன்ற யோசனைகளும் சிங்கள இனவாதிகள் மத்தியில் எதிர்ப்பைக் கிளப்பிவிட்டிருக்கிறது. இலங்கைத் தீவின் மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பை திரு. தொண்டமான் தமிழருக்கு தானமாக வழங்கிவிட்டார் என அவர் மீது குற்றம்சாட்டப்பட்டது.

திருக்கோணமலைத் துறைமுகம் சுயாட்சி அமைப்பின் நிர்வாக அதிகாரத்திற்கு உட்

இந்தச் சிங்கள இனவாத எழுச்சி இயக்கம் திரு.தொண்டமானை தமிழன் என்ற வகையில் இனங்கண்டு மிக மோசமாகச் சாடியது சிங்கள இனத்தின் விரோதி என்றும், துரோகி என்றும், சதிகாரன் என்றும், பிரபாகரனின் ஆவி என்றும் திட்டியது.

(தொடரும்)

# மாணவர்கள் மத்தியில் சுகாதாரம் பேண முயற்சி

பாடசாலை மாணவர்கள் மத்தியில் சுற்றாடல் சுகாதாரம் பேணும் நடவடிக்கைக்களை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான கூட்டம் ஒன்று கடந்தபுதன்கிழமை யாழ். அரசாங்க அதிபர் திரு. கா.மாணிக்கவாசகர் தலைமையில் யாழ். செயலகத்தில் கூடியது. மேற்படி கூட்டத்திலே மிக இளம் வயதிலிருந்தேசூழல் சுகாதாரம் பேணப்படல்வேண்டும் எனவும் அதனால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் இதனை வளர்ப்பதற்கு ஏற்ற வகையில் கட்டுரை, மற்றும் பேச்சுப்போட்டிகளைநடாத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் பல பிரமுகர்கள்கலந்துகொண்டனர்.(ச)

# கொழும்பிலிருந்துசீமெந்து பெற்றுத்தரக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசசார்பற்றநிறுவனங்களின் பராமரிப்பிலுள்ளஅகதிமுகாம்களின் மலசலகூடங்களின் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்குத் தேவையான சீமெந்தை கொழும்பிலிருந்து பெற்றுத் தருமாறு யாழ். அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் ஒன்றுவிடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம்யாழ்.செயலகத்தில் நடைபெற்ற அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான கூட்டத்திலேயே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களினதும் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மேற்படி கூட்டத்தில் இடம் பெயர்ந்தோருக்காக அமைக்கப்பட்ட குடிசைகளை தொடர்ந்து பராமரிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ச)

## தெரிவுக் குழுவிற்குச் சமர்ப்பித்த

# தீர்வுத்திட்டம் வெளியிடுதல் செயற்பாட்டிற்குக் குந்தகம்

## -எம்.எச். முஹமட்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கெனநியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு முன்னால்வைக்கப்படும் யோசனைகளை வெளியிடுவது அதன் செயற்பாட்டை அர்த்தமற்றதாக்கிவிடும் என்று சிறிலங்கா பாராளுமன்ற சபாநாயகர் எம்.எச். முஹமட் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றிய முஹமட் இதனைத் தெரிவித்தார். முன்னதாகப் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகள்குறித்துக் காரசாரமாக விவாதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்தே முஹமட் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து பாராளுமன்றத்தில் பேசியதை ஒட்டி நான் ஆச்சரியப்படுகிறேன் என்றும்,

தெரிவுக்குழுவின் அறிக்கை இச்சபையில்சமர்ப்பிக்கப்படும் வரை இது குறித்துப் பேசுவது முறையற்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சுபாஸ் சந்திர போஸிற்கு பாரதரத்னா விருது

இந்தியாவின் உயரிய விருதான 'பாரதரத்னா' விருது காலஞ்சென்ற நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், மௌலானா அப்துல் சலாம் ஆசாத் ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பினை ஜனாதிபதி மாளிகையில் அதிகாரிகள் நேற்று வெளியிட்டனர்.

சுபாஷ்சந்திபோஸின்96 வது பிறந்த நாள் கடந்த வியாழக்கிழமை கொண்டாடப்பட்ட வேளை இந்த விருது வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 155 மலையக இளைஞர் கைது

மலையகப் பகுதிகளில் இதுவரை நூற்றி ஐம்பத்தைந்து சந்தேக நபர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மலையகத்தில் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் பாராளுமன்ற விவகார அமைச்சர் வின்சென்ட் பெரேராபாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில்சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் சி.வி. குணரத்தினா கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

# வேலைவாய்ப்பு தேவை

வருடாந்தம் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் இளைஞர்கள், யுவதிகளுக்குஅரசாங்கம் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டியிருப்பதாக தோட்டச் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கென வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடு கடத்தல் உத்தரவு ஒருவருக்கு ரத்து

(டெல்அவிவ்)

ஆக்கிரமிக்கப் பட்ட பகுதிகளில் இருந்து வெளியேறுமாறு உத்தர விடப்பட்ட 12 பலஸ்தீனியர்களில் ஒருவரின் வெளியேற்றஉத்தரவை இஸ்ரேல்ரத்துச் செய்துவிட்டதாக கூறப்படுகிறது.

மேற்கு கரையில்உள்ள இராணுவ அதிகாரி இந்த உத்தரவை விடுத்ததாகவும் எனினும் ஏனைய பதினொருவரின் வெளியேற்ற உத்தரவு அப்படியே இருப்பதாகவும் ஜெருசலேமில் உள்ள இஸ்ரேலிய அதிகாரிஒருவர் கூறியுள்ளார்.

# ஷாமீரின் அரசாங்கம் மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை

(டெல்அவிவ்)

இஸ்ரேலியப் பிரதமர் இர்ஷாக ஷமீரின் ஆறாம் கூட்டணியை கவிழ்த்து விடுவதற்காக இடதுசாரி தொழிற்கட்சி நம்பிக்கையில்லாப்பிரேரணையை கொண்டுவந்திருக்கிறது.

இதையடுத்து ஆறாம் கூட்டணி கவிழ்ந்துவிடாமல் பாதுகாப்பதற்காக அரசாங்கத்தை ஆதரிக்கப்போவதாக இரு எம். பிக்களைக் கொண்ட வலதுசாரி சோமீட் கட்சி முடிவு செய்துள்ளதாகவும் இதனால் 120 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் அரசுக்கு 61 உறுப்பினர்களின் ஆதரவு இருக்கும் எனவும் ஜெருசலேமில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக ஏற்பட்ட கருத்து மோதலின் காரணமாக ஒரு மாதத்திற்கு முன்னர் வலதுசாரி சோமீ கட்சி ஆறாம் கூட்டணியில் இருந்து விலகியது

கடந்த ஞாயிற்றுக் கிழமை ஏனைய இரண்டு வலதுசாரிகள் ஆதரவை விலக்கிக் கொண்டன மேற்காசிய சமாதானப் பேச்சுக்களில் இஸ்ரேல் பங்கேற்பதை எதிர்க்கவே மேற்படி இரு வலதுசாரி ஞாகமது ஆதரவை விலக்கிக் கொண்டன இதையடுத்து ஷமீர் அரசு பெரும்பான்மை வலுவை இழந்து குறிப்பிடத்தக்கது.

# சீனா - இஸ்ரேல் இராஜீய உறவு

(பீகிங்)

சீனாவும், இஸ்ரேலும் தூதுவர் மட்டத்திலான ராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்தும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. இதற்கு முன்பாக சீனா இஸ்ரேலை உத்தியோக பூர்வமாக அங்கீகரித்துப் பிரகடனம் செய்தது.

பீகிங் விஜயத்தை மேற்கொண்ட இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சரும், சீனா வெளியுறவு அமைச்சரும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு சில மணி நேரம் முன்பாக சீன அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையொன்றில் இஸ்ரேல் ஆக்கிரமித்த அரபு நிலங்களை மீளளிக்க வேண்டுமெனவும், பாலஸ்தீனியர்கள் சட்டபூர்வமான நியாயமான உரிமைகளை இஸ்ரேல் அங்கீகரிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# தோட்டத் தொழிலாளர் குடியிருப்பு மீது தாக்குதல்

(பதுளை)

பதுளை வெவஸ்த தோட்டத்தில் தொழிலாளர்களின் குடியிருப்புகள்மீது ஒரு கோஷ்டியினர் தாக்கியதாக தொழிற்சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்பொழுது தோட்டப்பகுதிளில் இடம்பெறும் நெருக்கடிகளைப் பயன்படுத்தி ஒரு கோஷ்டியினர் அப்பகுதி குடியிருப்புக்களை தாக்கியதாகவும் இதனால் ஒரு தொழிலாளி பலத்த காயம் அடைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாளம்காட்டக்கூடிய நிலையில் இருந்தும் இன்றைய நெருக்கடிகளைப் பயன்படுத்தி வேறு தொல்லைகளுக்கு ஆளாகலாம் என்ற அச்சத்தினால் எவரும் புகார் செய்ய முன்வரவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஈழநாதம்

## குவைத் பயணம்

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சிறிலங்காவின் பிரதமர் டி. பி. விஜயதுங்கா நேற்று குவைத் பயணமானார். அவர் குவைத்தில் இலங்கையரின் தொழில் வாய்ப்பு பற்றியும், பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# 1981இல் வடக்கின்நிலை 1991 இல் மலையகத்தில்

(கொழும்பு)

1981இல் வடக்கிலே இருந்த நிலைமை 1991 இல் மலையக தோட்டங்களிலே உருவாகியுள்ளதென சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பாராளுமன்றத்தில் இடம் பெற்ற அவசரகால நீடிப்பு தொடர்பானவிவாதத்தின்போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மலையகப்பகுதியில் புலிகளின் ஊடுருவல் என்பது ஒரு சிலரின் பகல்கனவு என தொண்டமான் கூறியிருக்கிறார். அன்று நாம் வடக்கில் பயங்கரவாதம் வளர்கிறது என கூறியபோதும் அது கதை என்றுதான் கூறினார்கள் இன்று தொண்டமானும் அவ்வாறுதான் கூறுகிறார்.

தோட்டப்பகுதியில் பயங்கரவாதநடவடிக்கைகள் இடம் பெற்றிருப்பதை அறிக்கையில் சுட்டிக்காட்டி அவசரகால நிலைமையை நீடிக்கும் பிரேரணைக்கு ஒரு அமைச்சர் ஆதரவு கோருகிறார். அதேவேளை இன்னும்ஒருஅமைச்சர் தோட்டப்பகுதிகளில் புலிகளின் ஊடுருவல் ஒரு பகல் கனவு என்கிறார். அரசாங்கம் அதன் நிலைப்பாட்டை தெளிவாக விளக்கவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

## விபத்தில் சகோதரர்கள் காயம்

(ஈச்சமோட்டை)

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் நாவற்குழி கண்டி வீதியில் இடம்பெற்ற சைக்கில்-வாகன விபத்தொன்றில் இரு சகோதரர்கள் காயமுற்றனர். சைக்கிளும் வாகனமும் ஒன்றுடன்ஒன்று மோதியதில் சரசாலையைச் சேர்ந்த இரத்தினம் ராகினி (வயது21) இரத்தினம் சுரேஸ் (வயது17) ஆகியோர் காயப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (43)

# குழப்பத்தை ஏற்படுத்தும் தீர்வை ஏற்கப் போவதில்லை

### -பிரேமதாஸா

(கொழும்பு)

நாட்டில் குழப்பத்தை விளைவிக்கக் கூடிய தீர்வு எதையும் ஒருதலைப்பட்சமாகத் தான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறினார். புத்தளம் நகர மண்டபத்தில் இடம் பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் பேசுகையில் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாணசகல அரசியல் கட்சிகளும் அரசியல் வேறுபாடுகளை மறந்து செயற்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் தனிநாடு கோரிப் போராடும் ஒரு இயக்கம் தவிர ஏனைய இயக்கங்கள் அரசியல் நீரோட்டத்துடன் இணைந்துள்ளன. அவர்கள் தனிநாடு கோரவில்லை, ஆனால் தமது பிரச்சினைக்கு நியாயமான தீர்வு வேண்டும் எனக் கருதுகிறார்கள். இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண சகல கட்சிகளினதும் உதவி அரசுக்கு தேவைப்படுகிறது. சர்வகட்சி மாநாடும், பாராளுமன்ற தெரிவுக் குழுவும் இப் பிரச்சினைக்கு தீர்வுகாண எடுக்கும் முயற்சிகள் பாராட்டப் படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

## ஐ. தே. க.-இ. தொ. காங்கிரஸ் உறவைப் பிரிக்க முடியாது

ஐ.தே. கட்சியையும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் பிரிக்கசிலர் எடுக்கும் முயற்சிகள் சாத்தியமாகாது என கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தொண்டமானை வெளியேற்றுங்கள் என்ற கோஷத்தின் மூலம் இக் கட்சிகள் இரண்டையும் பிரிக்க எடுக்கும் நடவடிக்கைகளை கண்டித்தே அவர் இதனைத் தெரிதார்.

## சிங்களவரை

மாகாணசபைத் திட்டத்தை ஆதரிக்கிறார்கள் எனவும், சுமார் இருபத்தெட்டு சதவிகிதமானோர் தமிழருக்கென தனியான மாகாணசபைபோ அல்லது அதையொத்து மாகாண அரசுகளோ இருக்கக் கூடாது என்று வலியுறுத்துவதாகவும், சுமார் மூன்று விகிதமானோர் சிறுபான்மையினருக்கு எந்தச் சலுகையும் அளிக்கப்படக் கூடாது எனவும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இக் கருத்துக் கணிப்பீட்டின் போது உங்களுக்கு விருப்பமான அரசியல் தலைவர் யார் என்ற கேள்விக்கு இருபதைந்து வயதுக்கு உட்பட்டோரில் ஐம்பத்திரண்டு சதவிகிதத்தினர் எவருமில்லை எனப் பதிலளித்துள்ளனர்.

இலங்கைக்கு எத்தகைய அரசியலமைப்பு சிறந்தது என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், ஜனாதிப ஆட்சிமுறைக்கு ஒரு விகிதமானோரும், பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு முப்பத்து நான்கு சதவிகிதமானோரும், பெடரல் அமைப்பு முறைக்கு இருபது சதவிகிதமானோரும், பாராளுமன்ற அமைப்புடன் சார்ந்த ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு நாற்பத்துநான்கு சதவிகிதமானோரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

பொருளாதாரக் கொள்கை பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையில் பதினைந்து சதவிகிதமானோர் முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கைக்கும், ஆறு விகிதமானோர் திறந்த பொருளாதாரக்கொள்கைக்கும், எழுபத்தொன்பது விகிதமானோர் கலப்பு பொருளாதாரக் கொள்கைக்கும், ஆதரவு தெரிவித்துள்ளனர்.

குப் பதிலளிக்கையில் முப்பத்தெட்டு வீதமானோர் எவருமில்லை எனக் கூறியிருப்பதோடு, இருபத்தொரு வீதமானோர் லலித் அத்துலத்முதலியையும், பத்தொன்பது வீதமானோர்சிறிமாவோ பண்டாரநாயக்காவையும், ஏழு வீதமானோர் அநுரா பண்டாரநாயக்காவையும், ஆறு வீதமானோர் வாசுதேவ நாணயக்காரவையும், ஐந்து வீதமானோர் சந்திரிக்காகுமாரணதுங்காவையும், நான்கு வீதமானோர் தினேஷ் குணவர்த்தனாவையும் குறிப்பிட்டுள்ளனர்.

## நேர்முகப் பரீட்சை

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தில் தற்காலிக ஆசிரியர்களை நியமிப்பதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் புதன்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெற உள்ளது.

## பட்டினக்காத்தான் சூட்டுச்சம்பவம்

# மூவரைச் சரணடையுமாறு விசேட நீதிமன்றம் உத்தரவு

தமிழ்நாடு பட்டினக் காத்தான் என்னுமிடத்தில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பாக தேடப்பட்டுவரும் மூவரை தன்னிடம் சரணடையும்படி சென்னை விசேட நீதிமன்ற நீதிபதி சித்திக் உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக தேடப்பட்டுவரும் அகஸ்டின். சபூர் எனப்படும் தம்பிக்கொடி தமிழகத்தை சேர்ந்த ஜார்ஜ் ஆகியோரையும், இராமநாதபுரத்தில் வேறோர் சம்பவத்திற்காக தேடப்பட்டுவரும் சிவத்தானையும் பெப்ரவரி 19 ஆம் திகதிக்குள் சரணடையுமாறு உத்தரவு இடப்பட்டுள்ளது.

# தொலைத்தொடர்புசாதனம் கிணற்றிலிருந்து மீட்பு

(சென்னை)

தமிழ்நாட்டிலுள்ள பொள்ளாச்சி என்னும் இடத்தில் ஒரு கிணற்றிலிருந்து சக்தி மிக்க தொலைத்தொடர்புச்சாதனம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக இந்திய மத்திய புலனாய்வுத் துறைத் தலைவர் கே. எம். கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிணற்றிலிருந்து சயனைட் வில்லைகளும், ஒரு ஆயுதமும் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகவிசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர் ஒருவர் கொடுத்த தகவலின் பேரிலேயே இவை மீட்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

## நோயாளர்கள் பயணம்

(ஈச்சமோட்டை)

அவசரசிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட 39 நோயாளர்கள் நேற்று காலை குமண பப்பலில் கொழும்பு பயணமானார்கள். (43)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை

### -அக்கினோ அறிவிப்பு

(மணிலா)

பிலிப்பைன்சில் அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லையென தற்போதைய ஜனாதிபதி திருமதி கொரசொன் அக்கினோ கூறியுள்ளார். தமது கட்சியின் சார்பில் தற்போதைய இராணுவத் தளபதி பிடல் ராமோஷ் நியமிக்கப்படுவதாக திருமதி கொரசோன் அக்கினோ அறிவித்துள்ளமை கட்சிக்குள் பலத்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. கட்சியின் முக்கிய அங்கத்தவர்கள் தற்போதைய பிலிப்பைன்ஸ் சபாநாயகரையே ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க முயன்று வருகின்றனர்.

பைன்ஸ் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோசின் மனைவி இமெல்டா உட்பட பத்துப் பேர் போட்டியிடலாம் எனத் தெரியவருகிறது.

# கிளிநொச்சிக்கு மின்சாரம்; மூன்றுமாதங்கள் செல்லும்

### - கந்தசாமி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிப் பகுதிக்கு மின்சாரம் கிடைக்க மூன்று மாதங்கள் செல்லுமென வடபகுதி மின்சாரசபை முகாமையாளர் கே. கந்தசாமி தெரிவித்துள்ளார்.

கிடைக்கும். மாங்குளத்தில் மின் கோபுரங்கள் திருத்த வேண்டியிருப்பதுடன், மின் மாற்றிகளும் திருத்தவேண்டியிருப்பதனால் அந்த வேலைகளைப்பூர்த்தியாக்க கால அவ

விபத்துக்களைத் பிரிவு செயற்பட்டுவருகிறது

அண்மைக்காலங்களில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களினால் எமது மக்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் அயாயநிமான இழப்புக்களை பார்த்திருக்க முடியாது. இதனைத் தடுப்பதற்காக தொடர்புச் சாதனங்கள் ஊடாகவும் பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் வீதிவிபத்துக்களை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளைப் பற்றியும் விரிவுரைகளை நாம் நடாத்தியுள்ளோம். ஆயினும் இன்றுவரை விபத்துக்கள் அதிகரித்த வண்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சபாபதி மங்கையற்கரசி

காங்கேசன்துறையில் வசித்தவரும், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவருமான காலஞ்சென்ற ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர் திரு. மு. சபாபதியின் அன்பு மனைவி மங்கையற்கரசி 25-01-92 இல் (சனிக்கிழமை) காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், திருமதி ம. சுதாரஜினி, திரு. ச. நாகேந்திரகுமார் (பிரான்ஸ்), திரு. ச. சுதாஸ்கரன் (பிரான்ஸ்), திருமதி இ. சிவரஞ்சனி (சிங்கப்பூர்), திருமதி பி. ஜெயராஜினி (மாத்தளை) ச. உதயகரன், ச. இராஜகரன் (நடேஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும்,

திரு. கி. மகாலிங்கம் (கிராமசேவை அலுவலர், கொட்டடி, நாவாந்துறை), திரு. இரவீந்திரன் (பொறியியலாளர்; சிங்கப்பூர்), திரு. ந. பிறேம்ராஜ் (பொறியியலாளர். அபுதாபி) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

திரு. ந. இரத்தினம், காலஞ்சென்ற இராசையா திருமதி பொ. புவனேஸ்வரி திரு. ந. இராசேந்திரம், திருமதி இ. கமலநாயகி, திரு. அருணகிரிநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும்,

பிலிப்பைன்ஸில் அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லையென தற்போதைய ஜனாதிபதி திருமதி கொரசொன் அக்கினோ கூறியுள்ளார். தமது கட்சியின் சார்பில் தற்போதைய இராணுவத் தளபதி பிடல் ராமோஷ் நியமிக்கப்படுவதாக திருமதி கொரசோன் அக்கினோ அறிவித்துள்ளமை கட்சிக்குள் டலத்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. கட்சியின் முக்கிய அங்கத்தவர்கள் தற்போதைய பிலிப்பைன்ஸ் சபாநாயகரையே ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க முயன்று வருகின்றனர்.

எதிர்வரும் யூன் முப்பதாம் திகதியுடன் திருமதி சொரசோன் அக்கினோவின் பதவிக்காலம் முடிவடைவதை யொட்டி மே மாதத்தில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோசின் மனைவி இமெல்டா உட்பட பத்துப் பேர் போட்டியிடலாம் எனத் தெரியவருகிறது.

# கிளிநொச்சிக்கு மின்சாரம்; மூன்றுமாதங்கள் செல்லும் - கந்தசாமி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிப் பகுதிக்கு மின்சாரம் கிடைக்க மூன்று மாதங்கள் செல்லுமென வடபகுதி மின்சாரசபை முகாமையாளர் கே. கந்தசாமி தெரிவித்துள்ளார்.

மாங்குளம், கிளிநொச்சிப் பகுதிகளில் திருத்தவேலைகள் முடிய மூன்று மாதங்கள் பிடிக்கும். அதன் பின்னரே கிளிநொச்சிப் பகுதிக்கு மின்சாரம் கிடைக்கும். மாங்குளத்தில் மின் கோபுரங்கள் திருத்த வேண்டியிருப்பதுடன், மின் மாற்றிகளும் திருத்தவேண்டியிருப்பதனால் அந்த வேலைகளைப்பூர்த்தியாக்க கால அவகாசம் தேவையென அவர் தெரிவித்தார்.

# இனப்பிரச்சினை இல்லை; பயங்கரவாதமே உள்ளதாம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் எதிர்நோக்கப்படுவது இனப்பிரச்சினையல்லவென்றும் அங்கு பயங்கரவாதமே தலை தூக்கியுள்ளது என்றும் பிரதம மந்திரி டி.பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் பாராளுமன்றத்தின் அவசரகாலநீடிப்பு பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதைத் தெரிவித்தார்.

வன்முறையில் ஈடுபட்ட குழுக்களை ஜனநாயக அரசியல் வழியில் பின்பற்றச்செய்ய ஊக்கமளிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து நாட்டை பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து மீட்பதற்கு அரசு கடும் நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் தெரிவித்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் எடுக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை எனவும் மழை காலம் முடிவடைந்து வருவதால் வடக்கில் பயங்கரவாத ஒழிப்பு தீவிரப்படுத்தப்படும் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

# தெரிவுக்குழு சாட்சியமளிக்க கட்சிகளுக்கு அழைப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக அரசியல் கட்சிகள் சமர்ப்பித்திருக்கும் யோசனைகள் தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்னணியில் விளக்கமளிப்பதற்காக அரசியல் கட்சிகளை வரவழைப்பது என்ற முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை கூடிய இத் தெரிவுக்குழுவின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆசியான் அமைப்பில் சேர இந்தியா விருப்பம்

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் நிறுவனம் எனப்படும் ஆசியன் கூட்டமைப்பில் சேர்ந்து கொள்ள இந்தியா முன்வந்துள்ளது. இக் கூட்டமைப்பில் சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட 3௨ நோயாளர்கள் நேற்று காலை குமண பப்பலில் கொழும்பு பயணமானார்கள். (43)

1 சதுர கிலோ

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

★ ஏழு ''செஸ்னா'' ரக விமானங்கள் சேதமடைந்திருக்கின்றன. இவற்றில் மூன்று விமானங்கள் முற்றாக அழிந்துள்ளன.

★ இரண்டு ''பெல்'' ரக ஹெலிகொப்டர்கள் சேதமடைந்துள்ளன. இவற்றில் ஒன்றுமுற்றாக அழிந்துள்ளது.

★ ஆயுதங்கள், வெடிமருந்துகள் களஞ்சியப்படுத்திவைக்கப்பட்டிருந்த கட்டடத் தொகுதி முழுமையாகச் சேதமடைந்திருக்கிறது.

★ விமானங்கள் தரித்து நிற்கும் பகுதிகள் முற்றாகச் சேதமடைந்திருக்கின்றன.

★ தீயணைப்பு பயிற்சி நடைபெறும் பகுதி முற்றாகச் சேதமடைந்திருக்கிறது.

★ விமானத்தளத்தின் கருத்தரங்கு மண்டபம் முற்றாக அழிந்துள்ளது.

★ வேலைப்பகுதியில் கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

★ பங்கீட்டு களஞ்சியப் பகுதி முற்றாக அழிந்துள்ளன.

★ தொலைத்தொடர்பு பகுதி மின் விநியோகப் பகுதி, நீர் விநியோகப் பகுதி ஆகியவையும் முற்றாக அழிந்து செயல் இழந்துவிட்டன.

★ களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த சகல ஆயுதங்களும், வெடிமருந்துகளும் முற்றாக அழிந்துள்ளது.

★ தீயணைக்கும் வாகனங்கள் படையினரின் ஜீப் வண்டிகள், சிவிலியன் வாகனங்கள் ஆகியவை உட்பட பல வாகனங்கள் முற்றாக அழிந்துள்ளன.

★ விமானத் தளத்தில்காணப்பட்ட அனைத்து கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

மீட்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

விபத்துக்களைத்

பிரிவு செயற்பட்டுவருகிறது

அண்மைக்காலங்களில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களினால் எமது மக்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் அயாயநிமான இழப்புக்களை பார்த்திருக்க முடியாது. இதனைத் தடுப்பதற்காக தொடர் புச்சாதனங்கள் ஊடாகவும் பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் வீதிவிபத்துக்களை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளைப் பற்றியும் விரிவுரைகளை நாம் நடாத்தியுள்ளோம். ஆயினும் இன்றுவரை விபத்துக்கள் அதிகரித்த வண்ணமேயுள்ளன.

துவிச்சக்கர வண்டிகளில் செல்லும்போது பக்கம் பக்கமாகவும் ஒருவர் கையை மற்றவர் பிடித்தவண்ணம் கதைத்துக்கொண்டும் செல்வதனாலேயே மேற்படி விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

நாட்டில் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு நகரில்வாழும் பெரியார் கல்விமான்கள், பொதுமக்கள் பலர் தினமும் காவல் துறை அலுவலகத்திற்கு வருகை தந்து வேண்டுகோள் விடுத்த வண்ணம் உள்ளனர்.

இவர்களது இவ்வேண்டுகோளுக்கு மதிப்பளித்தும் எமது மக்களின் நலனைக் கருத்திற்கொண்டும் நாளை திங்கள் முதல் நகரின் அனேக முக்கிய இடங்களில் தமிழீழ காவல் துறையினர் வீதி விபத்து தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இக் கடமையில் ஈடுபடும் காவல்துறையினருக்கு பூரண ஒத்துழைப்பை நல்குமாறு மக்களைக் கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மடுமுகாமிலுள்ள

தவிர்த்துக் கொள்ள முடியும் என கருதப்படுகின்றது.

அகதிகளை இவ்வாறு வெவ்வேறுஇடங்களுக்கு இடம்மாற்றும் மேற்படி திட்டம் மிக விரைவில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றது. (க)

எங்களை

மீறல்கள்பற்றி ஆராய இலங்கை வந்துள்ள கனேடிய தூதுக் குழுவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இக்கடிதத்தில் எங்களுடைய பொறுப்பை நாம் தட்டிக்கழிக்கவில்லை. எங்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டவகையில் நடைபெறும் வேதனைதரும் சம்பவங்களை தடுக்கமுடியவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முப்பத்து நான்கு சதவிகிதமானோரும், பெடரல் அமைப்பு முறைக்கு இருபது சதவிகிதமர்னோரும், பாராளுமன்ற அமைப்புடன் சார்ந்த ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு நாற்பத்துநான்கு சதவிகிதமானோரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

பொருளாதாரக் கொள்கை பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையில் பதினைந்து சதவிகிதமானோர் முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கைக்கும், ஆறு விகிதமானோர் திறந்த பொருளாதாரக்கொள்கைக்கும், எழுபத்தொன்பது விகிதமர்னோர் கலப்பு பொருளாதாரக் கொள்கைக்கும், ஆதரவு தெரிவித்துள்ளனர்.

நம்பிக்கைக்குரிய அரசியல் வாதி யார் என்னும் கேள்விக்

அழிந்த

தரையிறக்கப்பட்டது.

தொலைநோக்கி கண்ணாடி மூலம் படம்பிடிக்க முயன்ற சிலரும் ஆயுதபாணிகளாக நின்ற விமானப்படையினரால் தடுக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனன்குடா

மான டி.பி. விஜயதுங்கா குறிப்பிட்டுள்ளார். மேலும் இதுதொடர்பாக விசாரணைக் குழுவின் விசாரணை நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை பிரதமர்டி.பி. விஜயதுங்கா விமானத்தள குண்டுவெடிப்புக்குநாசவேலை காரணமில்லை எனக் கூறுவது எந்தவித அடிப்படையும் அற்ற ஒரு கூற்று எனநிராகரித்தார்.

எதை அடிப்படையாகக் கொண்டு குண்டு வெடிப்பை ஒரு நாசவேலை அல்ல, ஒரு விபத்து என்று பிரதமர் கூறுகின்றார். வடக்கு-கிழக்கில் புலிகளுக்கு எதிரான போரிலே எமது விமானப்படை மகத்தான பணியைச் செய்து வருகின்றது. விமானப் படைப் பலத்தைப் பலவீனப்படுத்த வேண்டியது புலிகளைப் பொறுத்தவரைஅவசியமானது என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும் என்றார்.

மட்டக்களப்பில்

குப்பிட்டியில் இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பொது மக்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் அரசடித்தீவு எனும் இடத்தில் பதுங்கியிருந்த இராணுவத்தினர் அப்பகுதியால் வந்த மூன்று பொது மக்களை கைதுசெய்து முகாமிற்குக் கொண்டுசென்றனர். இவர்கள் பற்றிய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

...வசித்தவரும், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவருமான காலஞ்சென்ற ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர் திரு. மு. சபாபதியின் அன்பு மனைவி மங்கையற்கரசி 25-01-92 இல் (சனிக்கிழமை) காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், திருமதி ம. சுதாரஜினி, திரு. ச. நாகேந்திரகுமார் (பிரான்ஸ்), திரு. ச. சுதாஸ்கரன் (பிரான்ஸ்), திருமதி இ. சிவரஞ்சனி (சிங்கப்பூர்), திருமதி பி. ஜெயராஜினி (மாத்தளை) ச. உதயகரன், ச. இராஜகரன் (நடேஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும்,

திரு. கி. மகாலிங்கம் (கிராமசேவை அலுவலர், கொட்டடி, நாவாந்துறை), திரு. இரவீந்திரன் (பொறியியலாளர்; சிங்கப்பூர்), திரு. ந. பிறேம்ராஜ் (பொறியியலாளர். அபுதாபி)ஆகியோரின் அன்பு மாமியாரும்,

திரு. ந. இரத்தினம், காலஞ்சென்ற இராசையா திருமதி பொ. புவனேஸ்வரி திரு. ந. இராசேந்திரம், திருமதி இ. கமலநாயகி, திரு. அருணகிரிநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும்,

செல்வி ம. சுரேகா, ம. சுலக்ஷன், ம. சுலக்ஷினி, செல்வன் பி. அருண் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் 224, நாவலர் றோட், யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு 26-01-92 (ஞாயிறு) இன்று பிற்பகல் 3.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

[R/2148] — தகவல்: மகாலிங்கம்

# திருமதி ஈஸ்வரி இராஜகுலசிங்கம்

திருமதி ஈஸ்வரி இராஜகுலசிங்கம் 22 - 01 - 92 இல் காலமாகிவிட்டார். இவர் இராஜகுலசிங்கம் (ஓய்வு பெற்றவர்-நீர்ப்பாசன இலாகா) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராமலிங்கம் - தங்கம்மா அவர்களின் அன்புச் சிரேஷ்ட புதல்வியும், இராஜேஸ்வரன் (நீர்ப்பாசன இலாகா, பதுளை), இராஜேஸ்வரி, இராசமலர், கணேஸ்வரன் (மோகன்), சிவராசமனோகரன் (சிவா), நிஷாந்தன் (சதீஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வே. சிவநேசன், கீதாசெல்வரமணி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுராஷ், சுமித்திரா நித்திலா, சுலக்ஸி, அபிரூபன், முரளிகாந், பிரியதர்சினி ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிறு 26-01-92 காலை 10 மணிக்கு கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். நண்பர்களும், உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [2147]

தகவல்:
வே. சிவநேசன்

# திரு. சபாரத்தினம் பாலசுந்தரம்

உருத்திரபுரத்தில் வசித்த திரு.சபாரத்தினம் பாலசுந்தரம் காலமானார். இவர் சற்குணத்தின் அன்புக்கணவரும், கந்தையா சபாரத்தினம் - பொன்னம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற பங்கையச் செல்வி, பவானி, நந்தகுமார் (ஜேர்மன்) பாலகிருஷ்ணன் (இந்தியா), கலைச்செல்வி, ரோகினி, காலஞ்சென்ற ராசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நவரட்ணராஜா, கலா ஆகியோரின் அன்புமாமனும், ஜெயந்தன், இந்திகா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல. 3
சிவநகர்,
உருத்திரபுரம். [2146]

தகவல்:
குடும்பத்தினர்